# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 11,411 — 1958 ජූලි 4 වැනි සිකුරාදා — 4.7.1958

11,411 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆடி மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் சீ. 273. — உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொட்டுவே முகாந்திரம் தர்மசேன ஜயநெத்தி ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு மே மாதம் 30 ம் திகதியைக் கொண்ட 11,332 ம் இலக்க விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு மே மாதம் 31 ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட சீ. 269 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் இறக்குமதியாளரின் ஆகக்கூடிய மொத்த விலைகள், மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவையைப் பொறுத்த மட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மைசூர்ப் பருப்பு, முழு உழுந்து, கடலைப் பருப்பு, உருளைக் கிழங்கு முதலியவைகளைக் கொண்ட எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனுடனிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை இறக்குமதியாளர் ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறாத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன் ; குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்றலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு மே மாதம் 30 ம் திகதியைக் கொண்ட 11,332 ம் இலக்க விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு மே மாதம் 31 ம் திகதி பிரசுரமான உப உணவுப் பொருட்களைக் குறிக்கும் 3 ம் பத்தியிலிருந்து 8 ம் பத்தி வரையுள்ள இலக்கம் சீ. 269 ஐக் கொண்ட விலைக் கட்டளையுடன், இத்துடன் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களைக் குறிக்கும் அப்பந்திகள் இணைக்கப்பட்டுள்ளவை போலப் பாவிக்கப்படல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஜுலை மாதம் 3 ம் திகதியன்று பி.ப. 4 மணிக்குக் கொழும்பில் கையொப்பம் இடப்பட்டது.

K. M. D. ஜயநெத்தி,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

### அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>இறக்குமதியாளர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | பத்தி 3<br>மொத்த வியாபாரி மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | பத்தி 4<br>சில்லறை வியாபாரி நிகர இறாத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| மைசூர்ப் பருப்பு .. .. | 52 58 .. | 53 58 .. | 0 54 |
| முழு உளுந்து .. .. | 45 76 .. | 46 76 .. | 0 47 |
| கடலைப்பருப்பு .. .. | 38 79 .. | 39 79 .. | 0 40 |
| உருளைக் கிழங்கு .. | 28 00 .. | 29 00 .. | 0 31 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும் ; இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.